# 15 சொற்கோவைக் கட்டமைப்புக்கான பரிந்துரைகள் II: இடைவெளி நிரப்பல் பயிற்சிகளுடனும் மாற்றுச்சொல் தேர்வுகளுடனும் செயற்படுதல்

**இலக்கு**

# 14 இல் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளுக்கு மாறாக, பின்வருவன மிகத் தெளிவான வழிகாட்டல்களுடன் பெருமளவு கட்டமைக்கப்பட்டன.

## 1. இடைவெளி நிரப்பும் பயிற்சிகளுள்ள எழுத்துருக்கள்

1 - 9 ஆந் தரம் | 15 மணித்துளிகள்

கருவிகள்:
உருவாக்கப்பட்ட இடைவெளி நிரப்புப் பயிற்சிகள்

மந்த நிலைப்பட்ட ஆக்கவளமுடைய அணுகுமுறைக்கு மாறாக இடைவெளி நிரப்பல் பயிற்சிகளுடன் செயற்படுதல் மரபுவழிப்பட்டது. எவ்வளவு கற்றல் நடைபெற்றுள்ளது என்பதை மதிப்பிட இதனையும் பயன்படுத்தலாம். பயன்படு சூழலில் இலக்குச் சொற்களுடன் மேலதிகப் பயிற்சிப்பழக்கம் இருப்பதால் மட்டுமே இத்தகைய பயிற்சி மாணவர்களின் செயற்படு சொற்களஞ்சியத்தை பெருக்குதற்கு பங்களிக்கும்.
செயன்முறை: இல்லாத சொற்களை நிரப்பவேண்டிய இடைவெளிகளுடைய ஓர் எழுத்துருவுடன் கூடிய ஒரு பணித்தாளை ஆசிரியர் உருவாக்குகிறார். ("அறிவன் தோட்டத்தில் __________ பறித்தான்", "மற்றிட் ஸ்பெயினின் __________"). விளக்கப்படங்களையும் பயன்படுத்தலாம், அவை விவரத்துணுக்குடையனவாக அமையவேண்டும்.

அறிவன் தோட்டத்தில் ____ பறிக்கிறான்.

மற்றிட் ஸ்பெயினின் ____.

அம்மா ____ பாண் வாங்குகிறாள்.

நான் பால் ____ விரும்புகிறேன்.

ஓர் உற்சாகமான திரைப்படம் ____ காட்டப்படுகின்றது.

மருத்துவர் மருந்து ____.

____நாங்கள் கடற்கரைக்குச் செல்கிறோம்.

மறவன் ____ அணிவான்.

கொடி காற்றில் ____.

குடிக்க | படபடக்கின்றது | தக்காளிப்பழத்தை | கடையில் | குறித்துக்கொடுக்கிறார் | போருடை | கோடைகாலத்தில் | திரையரங்கில் | தலைநகர்

- எளிதாக்கப்பட்ட மாற்று: கீழேயுள்ள பட்டியலிலிருந்து பொருத்தமான சொல்லால் இடைவெளிகளை நிரப்புக. இவ்வணுகுமுறை 1ஆம் 2ஆம் தரத்தினர்க்கு ஏற்றதாகும் (எளிமையான வாக்கியங்களும் சொற்களும்), அதே வேளை உண்மையான தலைப்புகளுக்கு குறிப்பிட்ட சொற்களஞ்சியம் வேண்டப்படுகிறது. எடுத்துக்காட்டு: பயிர்ச்செய்கை, மனித உடலின் கீற்றுவடிவம், ஆறுகளின் வரைபடம் பற்றிய உண்மையான எழுத்துருக்களுக்கு சரியான சொற்களை சரியான இடங்களில் எழுதிவிடலாம்.
  முன்தேவை: பொருட்கள் பற்றி முன்கூட்டியே வகுப்பில் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும்.
  பின்னூட்டல்: அதன்பின் மாணவர்கள் பயிற்சிகளிலிருந்து சொற்களைப் பயன்படுத்தி, தம்முடைய வாக்கியங்களை எழுதுவர்.

- மிகக் கடினமான மாற்று: மாணவர்கள் தாங்களாகவே விடுபட்ட சொற்களை கண்டுபிடித்து இடைவெளிகளை நிரப்ப வேண்டும். இங்குகூட, பொருள் முன்னரே கற்றிருக்கவேண்டும் என்பது முன்தேவையாகும் (எழுத்துமொழியிலும் ஒலியமைப்பிலும் உள்ள சொற்கூறுகளும் உள்ளடங்கின). எச்சொற்கூறுகள் இடைவெளிகளில் உட்புகுத்த வேண்டுமென்பது தெளிவாயிருப்பின் இவ்வணுகுமுறை கற்றல் மதிப்பீட்டுக்கு ஏற்றதாகும் (எ-டு. தேசிய வரலாற்றுச் சொற்கூறுகள்). ஏனைய வழக்காறுகளில் பல்வேறு விடைகளுக்கு வாய்ப்புண்டு அவை கலந்துரையாடப்படலாம் (எ-டு. "திண்ணன் புதருக்குள்ளிருந்து __________, அவன் மிகவும் அச்சமடைந்திருந்தான்". விடைகள்: விரைந்தான், ஓடினான், ஒளித்துவந்தான்…).

- மாற்று "கவிதைகள்/இயைபுச் சொற்கள்": இடைவெளிகளை இயைபுபெற்ற சொற்களால் நிரப்பல். மாணவர் திறமை மட்டத்தினையொட்டி கடின நிலையினை மேலும் கூட்டலாம். எடுத்துக்காட்டு (கீழ் நிலைகளுக்கு): "அந்த வீட்டு பிள்ளை/ஒரு __________ பாடியது."

- இடைவெளி நிரப்புப் பயிற்சிகள் மொழியைக் கண்டறியும் சிறப்பான கவர்ச்சியான செயற்பாடுகளை நிறைவடையைச் செய்யும். அவ்வேளையில் இலக்கண அடிப்படையில் இன்றியமையாத கூறுகளாகிய வேற்றுமை உருபுகள், அல்லது எண் அடைகள் விடுபட்டிருப்பின் அவை இடைவெளிகளில் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: "தேனவன் ஒரு __________ யைக் கண்டான்" "நான் __________ உடைய அம்மாவுக்கு ஒரு முத்தம் கொடுக்கப்போகிறேன்." இப் பயிற்சிக்கு, ஒரு வினையின் அடிநிலை வடிவத்தினை அடைப்புக்குறிக்குள் கொடுக்கலாம், அது சரியான வடிவத்துக்கு மாற்றியமைக்கப்படவேண்டும்: "பூவிழி தாயகம் சென்றாள். அங்கு தன் உறவினரை __________ (காண்)". விளைவுகள் மாணவர்களின் முதல்மொழியில் அவர்களுக்குள்ள திறன் பற்றிய மதிப்புள்ள தகவல்களை வழங்குகின்றது.

---

## 2. மாற்றுச் சொல் தேர்வுகளுடன் செயற்படுதல்

2 - 9 ஆந் தரம்

30 மணித்துளிகள்

கருவிகள்:
உருவாக்கப்பட்ட பயிற்சிகள்
(வலம் பார்க்கவும்)

மாற்றுச் சொல் தேர்வுகளில் சில சொற்களுக்கு நிகரான வேறு சொற்கள் (அடிக்கடி ஒருபொருட்சொற்கள்) அமைக்கவேண்டும். இது செயற்படு சொற்களஞ்சிய விரிவாக்கத்தை வழங்கும் – அதன்படி எல்லா மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர். சொற்கள் மீட்டுரைப்பதுடன் பயிற்சியும் மேற்கொள்ளப்படும்.

மாற்றுகள்: (சிக்கலைப் பொறுத்து, கீழ் மற்றும் உயர் நிலைகளுக்குப் பொருத்தமாக).

- ஆசிரியர் அட்டவணையுள்ள ஒரு தாளினை வழங்குகிறார், அதன் மேற்பகுதியில் ஒரு வாக்கியம், எடுத்துக்காட்டாக, "இன்று பெரிதும் பனி பொழிகின்றது" அல்லது "என் அம்மா பெரும்பாலும் நீலக் கண்ணாடிக் குவளையில் தண்ணீர் குடிப்பாள்" என்பது அமைந்திருக்கும். அதில் ஒவ்வொரு சொல்லுக்கு அல்லது வாக்கியத்துக்கு ஒரு பத்தி இருக்கின்றது. அட்டவணையின் அடுத்த பத்தியில் மாணவர்கள் அதேமாதிரி வாக்கியங்களை அல்லது வாக்கியப் பகுதிகளை (அல்லது எதிரான) பின்வருமாறு எழுதவேண்டும்: "நேற்று சிறிது மழை பெய்தது", "உன் அக்கா சிவப்புக் கண்ணாடிக் குவளையில்தான் தண்ணீர் குடிப்பாள்".

- ஆசிரியர் ஒரு சிறிய எழுத்துருவை வழங்குகிறார் (½ பக்கம்; பரந்த கிடைநிலை) பின்வரும் அறிவுறுத்தல்களுடன்: "கீழ்க்கோடிடப்பட்ட எல்லாச் சொற்களுக்கும் (அல்லது எல்லா பெயர்களுக்கும், வினைகளுக்கும், அடைகளுக்கும்) ஏறத்தாழ அதே கருத்துள்ள சொற்களைப் பதிலிடுக."

- மேலுள்ளதுபோல், ஆனால் எல்லாச் சொற்களுக்கும் அவற்றின் எதிர்ப்பதங்களைப் பதிலிடுக என்னும் அறிவுறுத்தல்களுடன், (எடுத்துக்காட்டு: "சிறிய நாய் → பெரிய பூனை", "அவன் காட்டுக்குள் ஓடினான் → அவள் சதுப்பு நிலத்தில் ஊர்ந்துசென்றாள்"). ஒரு பொழுதுபோக்கு நீட்டிப்பு, இணையர்களாகச் செயற்படுதலுக்கு ஏற்றது, "எதிர் எழுத்துருக்கள்" எழுதுதல் அதாவது, ஒரு கதை அல்லது செய்திப் பத்திரிகைக் கட்டுரை முழுவதையும் எதிர்க்கருத்தில் மீள எழுதுதல்.

- மேலுள்ளதுபோல், ஆனால் இலக்கணம் சார்ந்தது: "எல்லாப் பெயர்களையும் ஒருமையிலிருந்து பன்மைக்கு மாற்றி வினைகளை இயைபுபடச் செய்க!", "எல்லா வினைகளையும் நிகழ்விலிருந்து இறப்புக்கு மாற்றுக" "அடைகளைச் சிறப்பு அடைகளாக மாற்றுக (நல்லது → மிகநல்லது), முதலியன.